**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண் : 203** **நாள் : 18.12.2018**

**பெருநகர சென்னை மாநகராட்சி மெரினா கடற்கரையில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற அறிவுறுத்தலின்படி, முறைப்படுத்தப்பட்ட கடைகளையும், மேற்கொள்ளப்பட்டு வரும் தூய்மை மற்றும் சுகாதாரப் பணிகளையும் இன்று ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று திடீர் ஆய்வு மேற்கொண்டார்.**

பெருநகர சென்னை மாநகராட்சி, தேனாம்பேட்டை மண்டலம், மெரினா கடற்கரையில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற அறிவுறுத்தலின்படி, முறைப்படுத்தப்பட்ட கடைகளையும், அங்கு மேற்கொள்ளப்பட்டுவரும் தூய்மை மற்றும் சுகாதாரப்பணிகளையும் இன்று (18.12.2018) காலை ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன் இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

உலகின் இரண்டாவது பெரிய கடற்கரையான மெரினா கடற்கரையில் தினந்தோறும் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர். மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற அறிவுறுத்தலின்படி, கடற்கரையை தூய்மையாக பராமரிக்கும் வகையில் அங்குள்ள சிறு கடைகள் முறைப்படுத்தப்பட்டு வரிசைப்படுத்தப்பட்டன. பெருநகர சென்னை மாநகராட்சி துப்புரவு மற்றும் சுகாதாரப் பணியாளர்களால் அங்கு சேகரமாகும் குப்பைகள் உடனுக்குடன் அகற்றப்பட்டு, தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இன்று காலை மெரினா கடற்கரைக்கு திடீர் ஆய்வு மேற்கொண்ட ஆணையாளர் அவர்கள் அங்கு முறைப்படுத்தப்பட்ட கடைகளையும், அங்கு மேற்கொள்ளப்பட்டு வரும் துப்புரவு பணிகளையும் ஆய்வு செய்தார். பின்னர் அலுவலர்களிடம் மெரினா கடற்கரை பல்லாயிரக்கணக்கான வெளிநாட்டு சுற்றுலா பயணிகளும் வந்து செல்கின்ற வரலாற்று சிறப்புமிக்க இடமாகும். எனவே, இச்சிறப்புமிக்க கடற்கரையை சுத்தமாகவும், தூய்மையாகவும் வைத்து கொள்ள தேவையான அனைத்து நடவடிக்கைகளும் தொய்வின்றி உடனுக்குடன் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும், இதில் ஏதேனும் குறைபாடுகள் இருப்பின் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, மெரினா கடற்கரையில் உள்ள இலவச பொதுக் கழிப்பிடத்திற்கு சென்று பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் தூய்மையாகவும், சுகாதாரத்துடனும் பராமரிக்கப்படுகிறதா என ஆய்வு செய்தார்.

மெரினா கடற்கரையில் கலங்கரை விளக்கம் முதல் பட்டினப்பாக்கம் வரை உள்ள லூப் சாலையை பொதுமக்களும், சுற்றுலா பயணிகளும் போக்குவரத்து இடையூறின்றி பயன்படுத்தும் வகையில் ரூ.47 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்துவதற்கான பூர்வாங்கப் பணிகள் துவக்கப்பட்டுள்ளன. இந்த லூப் சாலையை இன்று ஆய்வு செய்த ஆணையாளர் அவர்கள் அங்குள்ள கட்டிடக் கழிவுகளை உடனடியாக அகற்றும்படி

பணியாளர்களுக்கு உத்தரவிட்டார். மேலும், லூப் சாலையில் உள்ள மீன் கடைகளினால் போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் பல்வேறு இடையூறுகள் ஏற்படுகின்ற காரணத்தினால், மீன் வியாபாரிகளின் வாழ்வாதாரம் பாதிக்காதவகையில், ரூ.5 கோடி மதிப்பீட்டில் இரண்டு ஏக்கர் நிலப்பரப்பில் நவீன வசதிகளுடன் கூடிய 300 புதிய மீன் கடைகள் அமைக்கப்பட்டு வரும் பணிகளையும் ஆய்வு செய்தார்.

இவ்வாய்வின் போது துணை ஆணையாளர் (பணிகள்) திரு.எம்.கோவிந்தராவ், இ.ஆ.ப., அவர்கள், துணை ஆணையாளர் (சுகாதாரம்) திரு.பி.மதுசுதன் ரெட்டி, இ.ஆப., அவர்கள், மத்திய வட்டார துணை ஆணையாளர் டாக்டர் சுபோத்குமார், இ.ஆ.ப., அவர்கள், தலைமைப் பொறியாளர் (கட்டிடம்) திரு.என்.மகேசன், மேற்பார்வை பொறியாளர் (மின்சாரம்) திரு.பி.துரைசாமி, மண்டல அலுவலர் எஸ். அனிதா மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

**வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெருநகர சென்னை மாநகராட்சி**